[1979 மார்ச் 3

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது சொன்னதற்கு மேல் வேறு கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுத்தால் தண்ணீர் கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு விடும்.

சேரன் போக்குவரத்துக் கழகத் தோழிலாளர்களுக்கு வீடுகள்.

* வினா எண் 209—திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க திட்டமுள்ளதா ?

(ஆ) ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வீடுகள் எவ்வளவு ? ஒவ்வொரு வீட்டுக்கும் தொழிலாளிகளிடம் பெற்ற தொகை எவ்வளவு ?

(இ) அதிகாரிகளுக்கு கட்டப்பட்டுள்ள பங்களாக்கள் எத்தனை ? அவற்றின் மதிப்பென்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) சேரன் போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்காக சேரன் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலமாக, கோவையிலும், பொள்ளாச்சியிலும் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக ஈரோடு, திருப்பூர் போன்ற இடங்களில் வீடுகள் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகள் பற்றிய விபரம் :

இடம்.	டைப்.	எண்ணிக்கை.	வீட்டின் மதிப்பு.	காலி மனைக்கு வசூலிக்கப்பட்ட முன் பணம்.
கோவை	'ஏ'	14	ரூ. 33,000	ரூ. 2,850
கோவை	'பி'	23	ரூ. 19,000	ரூ. 2,000
கோவை	'சி'	105	ரூ. 10,000	ரூ. 1,150
பொள்ளாச்சி	'பி'	10	ரூ. 19,000	ரூ. 1,100
பொள்ளாச்சி	'சி'	152	ரூ. 10,000	ரூ. 650

1979 மார்ச் 3]

(இ) கோவையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளில் ரூ. 600-க்குமேல் ரூ. 1,500-க்குள் சம்பளம் பெறும் அலுவலர்களில் 14 பேருக்கு சுமார் ரூ. 33,000 மதிப்புள்ள 'ஏ' டைப் வீடும், 9 பேருக்கு ரூ. 19,000 மதிப்புள்ள 'பி' டைப் வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சேரன் டிரான்ஸ் போர்டில் சுமார் 4,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய பதிலின்படி பார்த்தால் 200, 250 பேர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு தான் முடியும் என்றால் அந்த நிலையை மாற்றி குறைந்த அளவில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறபோது அந்தத் திட்டத்தை கழகத்தின் சார்பிலே கட்டிக் கொடுக்கச் செய்ய ஏற்பாடு செய்வார்களா? கூட்டுறவுத் திட்டம் என்று வருகிறபோது 30 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு பெரும் தொகை ஆவதால் அந்தத் திட்டத்தில் தொழிலாளர்கள் சேர்ந்து பயனடைய முடியாது. ஆகவே அந்தக் கழகமே அதை எடுத்துக்கொண்டு அவர்களுக்கு வீடுகளைக் கட்டி வாடகைக்கு விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகம் மட்டுமல்ல, அனைத்துப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்களுக்குச் சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ அளிப்பதுபற்றி நடைமுறையிலே எந்த முறையில் செய்யலாம் என்று அரசு ஆலோசித்து அதை ஹட்கோ மூலம் செய்யலாமா என்று ஆராய்ந்து வருகிறது. ஹட்கோவைப் பொறுத்த வரையில் வட்டி விகிதம் சற்று அதிகமாக இருப்பதால் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சலுகை ஹட்கோ மூலம் செய்கிறபோது கிடைக்காத நிலைமை ஏற்படுகிறது. எனவே தொழிலாளர் நலத்துறை மூலமாக மீண்டும் ஹட்கோ மூலமாக பெறுவதற்காக கேட்டு இருக்கிறோம். அத்துடன், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கி மூலமும், எல்.ஐ. சி. மூலமும் நிதி பெற்று இந்தப் பணியை மேற்கொள்ள ஏற்ற ஆய்வுகளை நடத்தி வருகிறோம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் கூறிய பதிலில் 600 ரூபாய்க்கு மேற்பட்டவர்கள் என்ற முறையிலே சொன்னார்கள். அதிலே அனைவருக்கும் வீடு கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அனைத்துக் கார்ப்பரேஷனைச் சேர்ந்த சகல தொழிலாளர்களுக்கும் வீட்டுமனைகள் வழங்குவதோடு வீடுகள் கட்டிக் கொள்ள நீண்ட காலத் தவணையில் கடன் வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அவர்கள் வாடகை

வீடுகளில் இருந்தால் வேலைப்போன பிறகு காலி செய்துவிட வேண்டிவரும். எனவே, கடனிலே நிரந்தரமாக வீடு கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, 'ஹட்கோ' மூலமும் எல்.ஐ.சி. மூலமும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி மூலமும் நிதியுதவி பெற்று அவர்களுக்குச் சுலபமான தவணைகளில் கடன் உதவி தர இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் முறையில், தொழிலாளர்களிடம் முன்பணமாக ஒரு பகுதியைப்பெற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். கழகத்தின் சார்பில் இந்த வீடுகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டதா? அல்லது மாநில அரசு வீடுகளுக்கு உதவித்தொகை வழங்கியுள்ளதா என்பதை அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகம் ஏறத்தாழ பதினோரு இலட்சத்து எண்பத்தெட்டாயிரம் ரூபாய் இதற்கு நிதியுதவி அளித்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் போல, சேர, சோழ, பாண்டியன், அண்ணா தந்தை பெரியார், கட்டபொம்மன் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்துகொண்டிருக்கும் எல்லோருக்கும் வீடுகள் கட்டித்தரும் வாய்ப்பினை உருவாக்கி மேற்கொண்டிருக்கும் முயற்சியைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதிலே டெப்போக்கள் உள்ள இடங்கள் மட்டுமல்ல, 'பங்கு' என்று அழைக்கப்படும் இடங்களில் கூட அத்தகைய தொழிலாளர்களுக்கு என்ன வசதி செய்து தரப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் மாயூரம் போன்ற இடங்களில் — பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இப்பொழுது புதிதாகப் பலயிடங்களில்விட்டிருப்பதைப் போல அங்கேயும் பேருந்துகள் விட்டிருக்கிறார்கள் — அங்கு பேருந்துகள் நிறுத்தப்படும்பொழுது அதிலே வேலை செய்யும் தொழிலாளர்கள் அங்குள்ள பஸ் ஸ்டேன்டிலேயே படுக்க வேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது. அதை மாற்றி மற்ற தொழிலாளர்களுக்கு, டெப்போக்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளைப்போல அவர்களுக்கும் அளிக்க அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1979 மார்ச் 3]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றும் தொழிலாளர்கள் வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்ற நல்ல முயற்சியை மேற்கொள்ளும்பொழுது அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகாமையில் இப்படிப்பட்ட இடங்களை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் செயல்பட்டு வருகிறது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்குக் கோவை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வீடு கட்டப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் நீலகிரி மாவட்டத்தில் முழுக்க முழுக்க சேரன் போக்குவரத்தைத் தவிர வேறு வண்டிகளோ அல்லது ஊழியர்களோ இல்லை, ஆகவே, நீலகிரி மாவட்டம் புறக்கணிக்கப்படாமல் அங்கே தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிக்கு ஏற்பாடு செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட இடங்களைத்தான் குறிப்பிட்டேன். கட்ட இருக்கின்ற இடங்களிலே நீலகிரி மாவட்டமும் கருத்தில் கொள்ளப்படும்.

கெடிலம் ஆற்றின் அருகே நில ஆக்கிரமிப்பு

* வினா எண். 210—திரு. இல. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(ஆ) திருநாவலூர் தொகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் கெடிலம் நதிக்கு அருகாமையில் உள்ள இடம் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு ஓர் அரிசி ஆலையும், விடுதியும் கட்டி நடத்தப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். (அ) அரசுக்கு இதுபற்றித் தெரியும்.

(ஆ) மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.